**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டு வரும் காணி அபிவிருத்தி செயற்பாடு மற்றும் கட்டிடங்கள் முறையே ரூபா 22,621,698 மற்றும் ரூபா 64,483,040 ஆக இருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 24,974,950 மற்றும் ரூபா 63,991,257 என குறிப்பிடப்பட்ட காரணத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் காணி அபிவிருத்தி செயற்பாடு ரூபா 2,353,252 கூடுதலாகவும் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடங்கள் ரூபா 491,783 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன. | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | சரியான மீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சீதாவக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்கு நிலக்கீழ் மின்சாரத்தை வழங்குவதற்கு செலுத்தப்பட்ட ரூபா 126,265 தொகை மீளாய்வாண்டின் காணி அபிவிருத்தி செயற்பாடுகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | செலவினங்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் பட்டரி கார் வருமானம் ரூபா 19,038,160 ஆக இருந்த போதும் அது ரூபா 19,710,120 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 670,960 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்கான வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய பூக்கள் வளர்ப்பு புத்தக வருமானம் ரூபா 378,575 ஆக இருந்த போதும் அது ரூபா 591,315 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 212,740 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்கான வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய ஞாபகார்த்த மற்றும் நினைவுச் சின்ன வருமானம் ரூபா 656,420 ஆக இருந்த போதும் அது ரூபா 574,300 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 82,120 ஆல் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்கான வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் 02 ஞாபகார்த்த பீங்கான்கள் மற்றும் 195 கெக்டஸ் கூடைகள் விகனை செய்யப்பட்டிருந்த போதும் விற்பனை செய்யப்பட்ட அளவுகள் இறுதி இருப்பில் | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | இறுதி இருப்பு மீதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |

கழிக்கப்படாமையால் இறுதி இருப்பு ரூபா 299,928 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | தோகை ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | இந்த நிதியத்தை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக முன்கொண்டு செல்வதற்கு அமைச்சரவை பத்திரமொன்று வரைவாக்கப்பட்டு சுற்றுலா அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது | | சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக முன்கொண்டு செல்வதற்கு அமைச்சரவை பத்திரமொன்று வரைவாக்கப்பட்டு சுற்றுலா அமைச்சிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள இரண்டு ஊழியர்களுக்காக அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | தொழில் திணைக்களத்திடம் இருந்து விசாரித்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சட்டம் | அரச தாவரவியல் பூங்காவின் 200 ஆண்டினை கொண்டாடுவதற்குரிய 04 செயற்பாடு களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் பணம் செலவிடப்பட்டிருந்தது | **15,002,943** | நுழைவுச்சீட்டு வருமானத்திலிருந்து 25 சதவீதம் மற்றும் ஏனைய வருமான மார்க்கங்களில் கிடைக்கும் வருமானம் சேகரிப்பதற்கு செலவழிப்பதற்கு முதலீடு செய்வதற்கு நம்பிக்கை நிதியம் தாபிப்பதற்குரிய நம்பிக்கையை வெளியிடும் உறுதியின் மூலம் பொது திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 100,639,364 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா. 21,546,128 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 79,093,236 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இக் அதிகரிப்பிற்கு டிக்கட் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரோயல் தாவர பூங்காவின் பிரதான நுழைவாயிற்கு அண்மையில் நேரடி மரத்திலான சுவரொன்று நிர்மாணிப்பதற்காக விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தரொருவரால் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 4,655,000 ஆன மொத்த கிரய மதிப்பீடு சிவில் பொறியியலாளர் ஒருவரின் உறுதிப்படுத்தல் இல்லாமல் அதன் அடிப்படையில் அதன் சட்டகத்திற்காக ரூபா 1,235,000 தொகையும் பூச்சாடிகளுக்காக ரூபா 3,420,000 கொடுப்பனவிற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | திணைக்கள பொறியியலாளரின் வாய்மொழி ஆலோசணை பெற்றுக ் கொள்ளப்பட்டதாக | கட்டிடங்கள் நியம விலை பகுப்பாய்வின் (BSR) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு சிவில் பொறியியலாளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2015, 2018, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது தேவையினை திட்டவட்டமாக இனங்காணாமல் அச்சிடப்பட்ட ரூபா 8,160,594 ஆன பூச் செய்கைக்கான 5248 அறிவுறுத்தல் புத்தகங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளைவற்று காணப்பட்டன. | கொவிட் 19 நிலைமை காரணமாக சுற்றுலா பயணிகள் வருகை குறைவடைந்தமை மற்றும் ரோயல் தாவர பூங்காவின் 200 ஆண்டுகள் நிறைவிற்கு அண்மித்தாக நடாத்துவதற்கு இருந்த ஆரம்ப விழா நடாத்தப்படாமை காரணமாக விற்பனை குறைவடைந்ததாக | தேவைப்பாட்டின் பேரில் புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேராதனை ரோயல் தாவர பூங்கா வளவில் 04 நூதண நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2021 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 45,347,264 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்குரிய கிரய மதிப்பீட்டின் 46 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருக்கையில் அதற்காக ரூபா 7,175,225 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த செயற்பாடுகள் அத்திவசிய தாமதத்தை தவிர்ப்பதற்கு கொடுப்பனவு அத்தியவசியமான என்பதாக | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |